# மொனராகலை பிரதேச சபை
# மொனராகலை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 01 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 யூலை 05 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 செப்தெம்பர் 20 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மொனராகலை பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 1,140,840 தொகையான வட்டி கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்கச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 275,703 தொகை குறைவாகக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

#### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
|---|---|---|---|---|
| (i) | வீதவரியும் வரியும் | 2,357 | 2,585 | 10,936 |
| (ii) | வாடகை | 9,654 | 10,563 | 1,179 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 740 | 646 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 9,350 | 12,072 | 10,545 |

### 2.3.2 ஆதனவரி

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 140(1) இன் பிரகாரம் 1988 ஆம் ஆண்டின் பின்னர் இது வரையும் ஆதனவரி மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட வருமான விபரங்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை ஆதனவரி ரூபா 10,936,725 தொகையாக இருந்ததுடன் கணக்கின் பிரகாரம் ரூபா 2,807,283 ஆனமையால் ரூபா 8,129,442 ஆன வேறுபாடு காணப்பட்டது.

### 2.3.3 வாடகை

(அ) 2012 ஆம் ஆண்டிற்காக சபைக்குச் சொந்தமான மாட்டிறைச்சிக் கடையை ரூபா 2,232,164 தொகைக்கும் கோழி இறைச்சிக் கடையை ரூபா 100,000 வாடகைப் பணத்திற்கும் அரசாங்கத்தின் பெறுவனவு செயன்முறைகள் பின்பற்றப்படாமல் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 136 இன் பிரகாரம் சபைக்குச் சொந்தமான கடை வாடகையை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட வருமான விபரங்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை வாடகை ரூபா 1,179,406 ஆக

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 510,499 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 1,626,379 |

**2.4 மிகைக் கட்டணம்**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பொறுப்பு வாய்ந்த நபர்களுக்கு எதிராக என்னால் விதிக்கப்பட்ட மிகை அறவீடுகளின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 922,195 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

**2.5 செயற்பாடற்ற கணக்கு**

மக்கள் வங்கியில் பேணப்பட்ட 176752844 ஆம் இலக்க வங்கிக் கணக்கு செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 31,075 தொகையான மீதி காணப்பட்டது.

**2.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

2012 பெப்ரவரி 28 ஆந் திகதி சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் ஒரு ஏக்கர் அளவில் இறப்பர் மரக் கன்று நாற்றுமேடை செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கும் தேவையான நிலத்தைத் தயாா் செய்வதற்காகவும் ஏனைய பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காகவும் ரூபா 106,430 செலவிடப்பட்டிருந்தது. எனினும் அச்செயற்திட்டம் இதுவரையிலும் முழுமையாக வெற்றியடையாதிருந்தமை அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் இறப்பர் விதைகளை நாற்றுச் செய்வதற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 49,200 பெறுமதியான 12,000 பொலிதீன் பைகள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

**2.7 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 136752849 ஆம் இலக்க நடைமுறைக் கணக்கில் வழங்கப்பட்டும் 06 மாதங்களை விஞ்சிய ரூபா 49,276 பெறுமதியான 04 காசோலைகள் தொடர்பாக